| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.R.சாதிர்,<br>நகர்மன்ற தலைவர்<br>தென்காசி நகராட்சி,<br>தென்காசி. | திரு K.N.L.சுப்பையா அவர்கள்,<br>நகர்மன்ற துணைத்தலைவர் (ம),<br>அனைத்து நகர்மன்ற உறுப்பினர்கள்<br>தென்காசி நகர்மன்றம். |

நாள்:27.06.2022

ஐயா,

பொருள்: நகர்மன்ற சாதாரணக் கூட்டம் – தொடர்பாக

---

தென்காசி நகர்மன்ற சாதாரணக் கூட்டம் 30.06.2022 வியாழக்கிழமை முற்பகல் 11.00 மணிக்கு நகர்மன்றத்தில் நடைபெற உள்ளதால் மேற்படி கூட்டத்திற்கு அனைவரும் தவறாது கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இத்துடன் மேற்படி கூட்ட மன்றத்தின் பொருட்குறிப்பு இணைக்கப்பட்டுள்ளது.

நகர்மன்ற தலைவர்,
தென்காசி நகர்மன்றம்

இணைப்பு : மன்றப் பொருள்

நகல் :
1. பாராளுமன்ற உறுப்பினர், தென்காசி
2. சட்டமன்ற உறுப்பினர், தென்காசி
3. ஆணையர் மேஜைக்கு மற்றும் மேலாளர் மேஜைக்கு
4. பொறியாளர், தென்காசி நகராட்சி
5. சுகாதார அலுவலர், தென்காசி நகராட்சி
6. நகரமைப்பு அலுவலர், தென்காசி நகராட்சி
7. வருவாய் ஆய்வாளர், தென்காசி நகராட்சி
8. சுகாதார ஆய்வாளர், தென்காசி நகராட்சி
9. பத்திரிக்கை நிருபர்கள்.

## மன்றப்பொருள் 1

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய வார்டு எண் 10 மவுண்ட் ரோடு (புதுபள்ளிவாசல்) பகுதியில் உள்ள சிமெண்ட் தளக்கற்கள் (Paver Block Road) சாலை மிகவும் பழுதடைந்து பொதுமக்களின் போக்குவரத்திற்கு இடையூறாக உள்ளது. மேலும் மேற்படி பகுதியில் மழைநீர் வடிகால் இல்லாத காரணத்தினால் அப்பகுதியில் மழைநீர் மற்றும் கழிவுநீர் சரியாக வெளியேறாமல் ஆங்காங்கே தேங்கி நிற்கும் கழிவுநீரால் தொற்று நோய் ஏற்படும் வாய்ப்புள்ளது. ஏனவே அப்பகுதியில் உள்ள பொதுமக்கள் மற்றும் குழந்தைகளின் நலனை கருத்தில் கொண்டு மேற்படி பகுதியில் உள்ள சிமெண்ட் தளக்கற்கள் சாலையினை உயர்த்தி மழைநீர் மற்றும் கழிவு நீரை வெளியேற்றவும் மழைநீர் வடிகால் அமைக்கும் பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ9.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

## மன்றப்பொருள் 2

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய வார்டு எண் 10 வடக்கு மவுண்ட் ரோட்டில் உள்ள அடிபம்பு பழுதடைந்து தற்போது பொதுமக்களால் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ளது. எனவே பழுதடைந்த அடிபம்பினை அகற்றிவிட்டு சிறு மின்விசை பம்பு அமைத்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வரும் பொருட்டு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ1.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

## மன்றப்பொருள் 3

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மேலமுத்தாரம்மன் கோவில் முதல் காட்டுபாவா நடுநிலைப்பள்ளி வரையுள்ள சாலை மிகவும் பழுதடைந்து குண்டும், குழியுமாக உள்ளதால் பொதுமக்கள் மற்றும் பள்ளி வாகனங்கள் செல்ல மிகவும் இடையூறாக உள்ளது. எனவே அவ்வப்போது வாகன விபத்து ஏற்படும் சூழ்நிலை உருவாகிறது. மேலும் மேற்படி சாலையானது நகரின் முக்கியமான பகுதிகளின் இணைப்பு சாலையாகவும் உள்ளது. எனவே பொதுமக்கள் மற்றும் பள்ளிகளுக்கு செல்லும் மாணவ, மாணவியர்களின் நலனை கருத்தில் கொண்டு மேலமுத்தாரம்மன் கோவில் முதல் காட்டுபாவா நடுநிலைப்பள்ளி வரையுள்ள தார் சாலையினை சரிசெய்யும் பொருட்டு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ9.80 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

## மன்றப்பொருள் 4

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய வார்டு எண் 18 நடுப்பேட்டை தெருவில் உள்ள கிணறு மிகவும் பாழடைந்து நீர்வரத்து இல்லாமல் வறண்டு உபயோகமற்று பொதுமக்களின் பயன்பாட்டில் இல்லாத காரணத்தினால் மேற்படி கிணற்றினை நிரந்தரமாக மூட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ30000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

## மன்றப்பொருள் 5

இந்நகராட்சி பொறியியல் பரிவிற்கு மடிக்கணினி (Laptop) வாங்கப்பட்டு சுமார் பத்து வருடங்களுக்கும் மேலாகிவிட்டபடியால் அதனை பயன்படுத்த முடியவில்லை. மேலும் திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம் மற்றும் சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலகம் ஆகிய இடங்களுக்கு சென்று திட்டப்பணிகளுக்கான பணிகள் மேற்கொள்ள மேற்படி அலுவலகங்களிலிருந்தே சரிசெய்ய வேண்டியுள்ளது. எனவே புதியதாக மடிக்கணினி (Laptop) வாங்குவதற்கு உத்தேச செலவுத் தொகை ரூ75,000/-க்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

## மன்றப்பொருள் 6

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய வார்டு எண் 9 பாறையடி 2ம் தெருவில் (செம்பட்டையார் டீக் கடை அருகில்) உள்ள பொது குடிநீர் குழாய் அப்பகுதியில் உள்ள பொதுமக்களால் உபயோகப்படுத்தப்படாமல் உள்ளது. எனவே தற்போது மேற்படி தெருவிற்கு பதிலாக அதே வார்டில் உள்ள நகராட்சி கிணறு அருகில் பொது குடிநீர் குழாய் மாற்றம் செய்து பொதுமக்கள் குடிநீர் பெற ஏதுவாக மாற்றியமைக்கும்படி மேற்படி வார்டின் நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளதின் அடிப்படையில் பாறையடி 2ம் தெருவில் உள்ள பொது குடிநீர் குழாய், நகராட்சி கிணறு அருகில் மாற்றியமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

## மன்றப்பொருள் 7

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய வார்டு எண் 18 நடுப்பேட்டை தெருவில் உள்ள பீரோ கம்பெனி அருகில் உள்ள பொது குடிநீர் குழாய் அப்பகுதியில் உள்ள பொதுமக்களால் உபயோகப்படுத்தப்படாமல் உள்ளது. எனவே தற்போது மேற்படி தெருவில் இருக்கும் பொது குடிநீர் குழாயினை அதே வார்டில் உள்ள வடக்கு பகுதி தெரு முனையில் மாற்றம் செய்து பொதுமக்கள் குடிநீர் பெற ஏதுவாக மாற்றியமைக்கும்படி மேற்படி வார்டின் நகர்மன்ற தலைவர் அவர்கள் கோரியுள்ளதின்

அடிப்படையில் நடுப்பேட்டை தெருவில் உள்ள பொது குடிநீர் குழாய், அதே இடத்தின் வடக்கு பகுதி தெரு முனையில் மாற்றியமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

## மன்றப்பொருள் 8

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட புதிய வார்டு எண் 10 மவுண்ட் ரோடு ஆட்டோ ஸ்டான்ட் அருகில் உள்ள பொது குடிநீர் குழாய் அப்பகுதியில் உள்ள பொதுமக்களால் உபயோகப்படுத்தப்படாமல் உள்ளது. எனவே தற்போது மேற்படி தெருவில் இருக்கும் பொது குடிநீர் குழாயினை 20 மீட்டர் தொலைவில் மாற்றம் செய்து பொதுமக்கள் குடிநீர் பெற ஏதுவாக மாற்றியமைக்கும்படி மேற்படி வார்டின் நகர்மன்ற உறுப்பினர் அவர்கள் கோரியுள்ளதின் அடிப்படையில் மவுண்ட் ரோடு ஆட்டோ ஸ்டான்ட் அருகில் உள்ள பொது குடிநீர் குழாயினை, ஏற்கனவே இருக்கும் இடத்திற்கு 20 மீட்டர் தொலைவில் மாற்றியமைக்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

## மன்றப்பொருள் 9

இந்நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட ஆய்க்குடி ரோட்டில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான வளமீட்பு மையத்திற்கு இரும்பிலான கதவு மற்றும் மையத்தினை சுற்றி இரும்பிலான வலை பதிக்கும் பணி மேற்கொள்ள வேண்டியுள்ளது எனவே மேற்படி பணிக்கு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு தொகை ரூ1.90 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

## மன்றப்பொருள் 10

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட ஆபாத் பள்ளிவாசல் தெரு மற்றும் மலையான் தெரு ஆகிய பகுதிகளுக்கு 9.00 இலட்சம் நீர்தேக்கத்திலிருந்து தாமிரபரணி குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி நீர்தேக்கத்திலிருந்து 3” PVC பைப் மூலம் குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. வீட்டு குடிநீர் இணைப்புகள் மேற்படி லயனில் கூடுதலாக உள்ளதால் குறிப்பிட்ட தூரத்திற்கு நீர்தேக்கத்திலிருந்து குடிநீர் விநியோகம் செய்ய 5” PVC பைப்பாக மாற்றம் செய்ய வேண்டியுள்ளது. எனவே மேற்படி பைப்லைன் மாற்றம் செய்ய தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ1.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி பணி குடிநீர்ப்பணி என்பதால் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

## மன்றப்பொருள் 11

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட நடுப்பேட்டை தெரு, சிக்கந்தர் மேத்தா தெரு மற்றும் பாறையடி தெரு ஆகிய பகுதிகளுக்கு 9.00 இலட்சம் நீர்தேக்கத்திலிருந்து தாமிரபரணி குடிநீர் விநியோகம் வழங்கப்பட்டு வருகிறது. மேற்படி நீர்தேக்கத்திலிருந்து குடிநீர் விநியோகம் சீரான முறையில் வழங்க இயலாத காரணத்தினால் மேற்கண்ட தெருக்களுக்கு தனியாக குடிநீர் விநியோகம் செய்ய புதிதாக பைப்லைன் அமைக்க வேண்டியுள்ளது. எனவே மேற்படி பைப்லைன் அமைக்க தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ2.10 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி பணி குடிநீர் பணி என்பதால் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.

3. மேற்படி செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

## மன்றப்பொருள் 12

தென்காசி நகராட்சி எல்லைக்குட்பட்ட மலையான் தெருவில் உள்ள நகராட்சிக்கு சொந்தமான நகர்நல மையக் கட்டிடம் பொதுமக்களின் சேவையில் உள்ளது. தென்காசி துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் (பொ) அவர்கள் தற்போது அக்கட்டிடம் பழுதடைந்து, மிகவும் இடவசதியின்றி நெருக்கடியாக உள்ளதாக குறிப்பிட்டு பழுதான மேற்படி கட்டிடம் இடித்து அப்புறப்படுத்திவிட்டு அதே இடத்தில் புதிதாக நகர்நல மையக்கட்டிடம் கட்டுவதற்கு செயல்முறை ஆணை ந.க.எண் 1025/அ5/2012 நாள் 29.03.2022ன்படி நிர்வாக அனுமதி வழங்கியுள்ளார். மேற்படி பணிக்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக தலைமைப்பொறியாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 001/2020/DO1 நாள் 30.05.2022ல் புதிய நகர்நல மையம் கட்டிடம் கட்ட தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் மேற்கண்ட மலையான்

தெருவில் உள்ள சேதமடைந்த நகர்நல மையக் கட்டிடம் இடித்து அப்புறப்படுத்த தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ3.10 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மேற்படி பணி உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் அனுமதிக்கலாம்.
3. மேற்படி செலவினத்தை நகராட்சி பொது நிதியின் கீழ் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

## மன்றப்பொருள் 13

தென்காசி நகராட்சிக்கு சொந்தமான (மத்தளம்பாறை ரோடு) உரக்கிடங்கில் 40KLD கொள்ளளவு கொண்ட கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் FSTP (Faecal Sludge Treatment Plant) அமைக்கும் பணி முடிவுற்று உள்ளது. மேற்கண்ட கசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு குறித்து சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். 21978-40/2020/UGSS-2 நாள்.16.03.2021ல் அறிவுறுத்தியுள்ள வழிகாட்டு நெறிமுறைகளின்படி இந்நகராட்சி பகுதியில் அமைந்துள்ள கசடு கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீட்டு ரூ.16.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு

1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி செலவினை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3 மேற்படி பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

## மன்றப்பொருள் 14

இந்நகராட்சிக்கு சொந்தமான குடிநீர் டேங்கர் வாகனம் தகுதிசான்று பெறவேண்டியிருப்பதால் மேற்படி வாகனத்தின் பழுதினை சரிசெய்து வரும் வரை இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு பொதுமக்கள் நலன் கருதி தனியார் குடிநீர் வாகனம் மூலம் இரண்டு மாதத்திற்கு குடிநீர் விநியோகம் செய்ய தயார் செய்யப்பட்ட தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடு ரூ2.50 இலட்சத்திற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

3 மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் பொதுமக்களின் நலன் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தப்புள்ளி கோரியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

## மன்றப்பொருள் 15

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2022-23ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களால் 07.06.2022ம் தேதியில் முன்அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 21.06.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகிளில் தனியார் குடிநீர் வாகனம் மூலம் குடிநீர் விநியோகம் செய்தல் | 2.50 | திரு S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர்<br>திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 0.13% குறைவு<br>1.95% கூடுதல் |

அ.கு மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.13% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திருS.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

## மன்றப்பொருள் 16

தென்காசி நகராட்சியில் பொது நிதி 2022-23ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களால் 07.06.2022ம் தேதியில் முன்அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 21.06.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற

ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமானகசடு கழிவு சுத்திகரிப்பு நிலையம் இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளுதல் | 16.50 | திரு S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரர்<br>திரு U.முத்துக்குமார் ஒப்பந்தக்காரர் | 0.05% குறைவு<br>3.13% கூடுதல் |

அ.கு மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.05% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு S.பாலசுப்பிரமணியன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் 17**

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2022-23ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 72 நாள் 26.05.2022யில் ஒப்புதல் வழங்கப்பட்ட பணிக்கு 14.06.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | சம்பா தெருவில் உள்ள பழுதடைந்த தாய்சேய் நலவிடுதி கட்டடம் இடித்து அப்புறப்படுத்துதல் | 0.90 | திரு C.லெட்சுமணன் ஒப்பந்தக்காரர்<br>திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.10% குறைவு<br>4.49% கூடுதல் |

அ.கு மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.10% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு C.லெட்சுமணன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

## மன்றப்பொருள் 18

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2022-23ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களால் 31.05.2022ம் தேதியில் முன்அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 14.06.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | ஆபாத் பள்ளிவாசல் 2ம் தெரு மற்றும் மலையான் தெரு ஆகிய தெருக்களில் குடிநீர் குழாய் பதித்தல் | 1.50 | திரு A.செயது அலி ஒப்பந்தக்காரர் | 0.10% குறைவு |
| | | | திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.28% கூடுதல் |

அ.கு மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.10% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு A.செய்துஅலி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

## மன்றப்பொருள் 19

தென்காசி நகராட்சியில் குடிநீர் நிதி 2022-23ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களால் 31.05.2022ம் தேதியில் முன்அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் 14.06.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | நடுப்பேட்டை தெரு, சிக்கந்தர் மேத்தா தெரு மற்றும் பொன்னி பாறை தெரு ஆகிய தெருக்களில் குடிநீர் குழாய் பதித்தல் | 2.10 | திரு A.செயது அலி ஒப்பந்தக்காரர்<br>திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.10% குறைவு<br>0.30% கூடுதல் |

அ.கு மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.10% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு A.செய்துஅலி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

## மன்றப்பொருள் 20

தென்காசி நகராட்சியில் பொது நிதி 2021-22ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் நாள் 07.01.2022ம் தேதியில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 514.06.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | தென்காசி நகராட்சி பொறியியல் பிரிவின் கீழ் மேற்கொள்ளப்படும் பணிகளுக்கு பயன்படுத்தப்படும் பொருட்களின் அளவீடு மற்றும் எடை சரிபார்த்தல் இயந்திரங்கள் விநியோகம் செய்தல் | 2.00 | திரு C.லெட்சுமணன் ஒப்பந்தக்காரர்<br>திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.01% குறைவு<br>1.32% கூடுதல் |

அ.கு மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.01% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு C.லெட்சுமணன் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

## மன்றப்பொருள் 21

தென்காசி நகராட்சியில் கல்விநிதி 2022-23ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 70 நாள் 26.05.2022ம் தேதியில் ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. அதன்படி 14.06.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | 7வது வார்டு நகராட்சி நடுநிலைப் பள்ளியில் Digital Learning System and Digital PA System அமைத்தல் | 9.30 | M/s 3A Associates மதுரை<br>M/s. Suxus Engineering மதுரை | 0.05% குறைவு<br>2.15% கூடுதல் |
| 2 | 9வது வார்டு நகராட்சி நடுநிலைப் பள்ளியில் Digital Learning System and Digital PA System அமைத்தல் | 9.30 | M/s 3A Associates மதுரை<br>M/s. Suxus Engineering மதுரை | 0.05% குறைவு<br>2.15% கூடுதல் |
| 3 | 13வது வார்டு நகராட்சி நடுநிலைப் பள்ளியில் Digital Learning System and Digital PA System அமைத்தல் | 9.30 | M/s 3A Associates மதுரை<br>M/s. Suxus Engineering மதுரை | 0.05% குறைவு<br>2.15% கூடுதல் |

அ.கு மேற்கண்ட பணிகளுக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள மதுரை M/s 3A Associates நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

## மன்றப்பொருள் 22

தென்காசி நகராட்சிக்கு சொந்தமான போகநல்லூார் உரக்கிடங்கில் கடந்த 20 வருடங்களுக்கு மேலாக குப்பைகள் சேர்ந்துள்ளதால், சுற்றுப்புற சூழல் பாதுகாப்பு கருதி மேற்கண்ட உரக்கிடங்கில் சேகரமடைந்துள்ள குப்பைகளை (Legacy waste) Bio mining மூலம் அப்புறப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு சென்னை, நகராட்சிகளின் நிர்வாக இயக்குநர், அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்படி இடத்தில் உள்ள குப்பைகளை சென்னை, அண்ணா பல்கலைக்கழகம் மூலம் அளவீடு செய்வதற்கு கட்டணமாக ரூ1,55,000/–மற்றும் GST 18% சேர்த்து மொத்தத் தொகை ரூ1,77,000/– செலுத்துமாறு சென்னை, அண்ணா பல்கலைகழக இயக்குநர் அவர்களின் கடிதம் எண்.032/CES/DIR/Tenkasi Municipality/2022-23 நாள்.

05.05.2022ம் தேதிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மேற்படி தொகையை செலுத்த மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1. மன்றம் அனுமதிக்கலாம்

2. மேற்படி பணி திட்டப்பணி என்பதால் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்

## மன்றப்பொருள் 23

தென்காசி நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022-23ம் ஆண்டின் கீழ் நகராட்சிக்கு சொந்தமான பழைய பேருந்து நிலையத்தில் அறிவுசார் மையம் (Knowledge Centre) அமைப்பதற்கு ரூ227.70 இலட்சத்திற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் G.O.(Ms) No.88, நாள் 17.06.2022ன்படி நிதி ஒதுக்கீடு செய்து நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. அதன்படி சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண் 8879/2022/P2, நாள் 21.06.2022ன்படி மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. எனவே மேற்படி மதிப்பீட்டிற்கு சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக, தலைமைப் பொறியாளர் அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 மேற்படி திட்டப் பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்

## மன்றப்பொருள் 24

தென்காசி நகராட்சி எல்லைக்குப்பட்ட பொதுமக்களுக்கு குற்றாலம் குடிநீர் மலையான் தெரு கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டி மூலம் தினசரி 17.00 இலட்சம் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. குடிநீரில் உள்ள கிருமிகளை அழிப்பதற்கு தேவையான HYPO Chlorine Oil 15000லிட்டர் வாங்க உத்தேச செலவுத் தொகை ரூ2.50 இலட்சத்திற்கும், மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு 21.06.2022ம் தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | ஒரு லிட்டர் ரூ |
|---|---|---|
| 1 | Excelent Chloro Systems. Thiruvalluvar Nagar, Sankarankovil | ரூ15.90 |
| 2 | Quality Engineering Systems 65 Ramzan Street, Padi Chennai | ரூ19.50 |
| 3 | Shri Sathya Dyes and Chemicals, 1/72 Asaripatti Road, Auntipatti, Theni | ரூ20.25 |

அ.கு

1 மேற்படி பணிக்கான உத்தேச செலவுத் தொகை ரூ2.50 இலட்சத்தை மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்கண்ட விலைப்புள்ளிகளில் 1ல் கண்ட சங்கரன்கோவில் Excelent Chloro Systems நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

3 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

4 மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பொதுமக்களின் நலன் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதியை பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்

## மன்றப்பொருள் 25

தென்காசி நகராட்சி எல்லைக்குப்பட்ட பொதுமக்களுக்கு தினசரி 40.00 இலட்சம் லிட்டர் முதல் 50.00 இலட்சம் லிட்டர் வரை தாமிரபரணி குடிநீர் இந்நகர் பகுதிகளில் உள்ள மேல்நிலை மற்றும் கீழ்நிலை நீர்தேக்கத் தொட்டிகள் மூலம் வழங்கப்படுகிறது. மேலும் மேற்படி நீர்தேக்கத் தொட்டிகள் மூலம் வழங்கப்படும் குடிநீரில் உள்ள கிருமிகளை அழிப்பதற்கு தேவையான கிருமி நாசினி (Chlorine Gas) சிலிண்டர் 15 எண்ணம் வாங்க உத்தேச செலவுத் தொகை ரூ1.50 இலட்சத்திற்கும், மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்படி பணிக்கு 21.06.2022ம் தேதியன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட விபரப்படி வரப்பெற்ற விலைப்புள்ளிகளின் ஒப்புநோக்குப் பட்டியல் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி | 100கிலோ குளோரின் சிலிண்டர் ஒன்றிற்கு ரூ |
|---|---|---|
| 1 | Excelent Chloro Systems.<br>Thiruvalluvar Nagar, Sankarankovil | ரூ9600/- |
| 2 | Quality Engineering Systems<br>65 Ramzan Street, Padi Chennai | ரூ11800/- |
| 3 | Shri Sathya Dyes and Chemicals,<br>1/72 Asaripatti Road, Auntipatti, Theni | ரூ10400/- |

அ.கு
1 மேற்படி பணிக்கான உத்தேச செலவுத் தொகை ரூ1.50 இலட்சத்தை மன்றம் அனுமதிக்கலாம்.
2 மேற்கண்ட விலைப்புள்ளிகளில் 1ல் கண்ட சங்கரன்கோவில் Excelent Chloro Systems நிறுவனத்தின் குறைந்த விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.
3 மேற்படி செலவினை நகராட்சி குடிநீர் நிதியில் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்
4 மேற்படி குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி பொதுமக்களின் நலன் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதியை பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்

## மன்றப்பொருள் 26

தென்காசி நகராட்சியில் பொது நிதி 2022-23ன் கீழ் கீழ்க்கண்ட பணி மேற்கொள்ள இந்நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி நாள் 31.05.2022ன்படி அனுமதி பெறப்பட்ட பணிக்கு 14.06.2022ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டு மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | மலையான் தெருவில் உள்ள பழுதடைந்த நகர்நல மையம் கட்டடம் இடித்து அப்புறப்படுத்துதல் | 3.10 | திரு A.செய்துஅலி ஒப்பந்தக்காரர்<br>திரு S.முருகன் ஒப்பந்தக்காரர் | 0.02% குறைவு<br>0.07% கூடுதல் |

அ.கு 1 மேற்கண்ட பணிக்கு வரப்பட்ட ஒப்பந்தப்புள்ளிகளில் 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு A.செய்துஅலி ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

2 மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

## மன்றப்பொருள் 27

தென்காசி நகராட்சியில் தேசிய நகர்ப்புற சுகாதார குழுமம் 2021-22ம் ஆண்டின் கீழ் இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மலையான் தெருவில் புதிதாக நகர்நல மையம் கட்டும் பணிக்கு ரூ75.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு, தென்காசி துணை இயக்குநர் சுகாதாரப் பணிகள் (பொ) அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண் 1025/அ5/2012 நாள் 29.03.2022ன்படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள பணிக்கு, சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக, தலைமைப் பொறியாளர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண் 001/2022/DO1 நாள் 30.05.2022ன்படி தொழில்நுட்ப அனுமதி பெறப்பட்டுள்ளது. அதன்படி கீழ்கண்ட பணிக்கு 14.06.2022ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

1. திரு K.நவாஸ்கான்,
   ஒப்பந்தக்காரர்
   சங்கரன்கோவில்
2. M/s PSR Construction.
   ஒப்பந்தக்காரர்
   சங்கரன்கோவில்

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் (Technical Bid) தொழில்நுட்ப தகுதி கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி (Technical Responsive) பெற்றுள்ளதால், 15.06.2022 அன்று விலைப்புள்ளி (Price Bid) உறை திறக்கப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | மலையான் தெருவில் புதிதாக நகர்நல மையம் கட்டுதல் | 75.00 | திருK.நவாஸ்கான், ஒப்பந்தக்காரர் | 4.90% கூடுதல் |
| | | | M/s PSR Construction, ஒப்பந்தக்காரர் | 6.30% கூடுதல் |

மேற்படி விலைப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் திருK.நவாஸ்கான் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு விகிதத்தினை விட 4.90% கூடுதலில் குறைவாக கொடுத்துளார். எனவே மேற்கண்ட ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு 1 மேற்படி பணிக்கு மதிப்பீட்டினை விட 4.90% கூடுதலில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள திரு.K.நவாஸ்கான் ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் முடிவு செய்யலாம்.

2 மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

## மன்றப்பொருள் 28

தென்காசி நகராட்சியில் துாய்மை இந்தியா திட்டம் திடக்கழிவு மேலாண்மை 2018-19ம் ஆண்டின் கீழ் இந்நகராட்சிக்கு சொந்தமான மத்தளம்பாறை ரோடு உரக்கிடங்கில் 27960 கன.மீ அளவு தேங்கியுள்ள குப்பைகளை Bio-Mining முறையில் அகற்றும் பணியினை மேற்கொள்ள இந்நகர்மன்ற தீர்மானம் எண் 453 நாள் 15.10.2018ன்படி கோயம்புத்துார் ஸ்ரீபொம்மு இன்டஸ்டிரீஸ் நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழுங்கப்பட்டது. மேறபடி நிறுவனம் 10801 கன.மீ அளவு குப்பைகள் மட்டுமே Bio-Mining முறையில் அகற்றி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள குப்பைகளை அகற்றும் பணிக்கு பலமுறை அறிவிப்பு கடிதங்கள் அனுப்பப்பட்டும் குப்பைகளை அகற்றும் பணியினை முழுமையாக முடிக்கப்படாததால் இந்நகர்மன்ற தீர்மானம் 11 நாள் 17.03.2022ம் தேதியின்படி மேற்கண்ட நிறுவனத்தின் ஒப்பந்தத்தை இரத்து செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது. 27960 கன.மீ அளவு குப்பைகளில் 10801 கன.மீ அளவு குப்பைகள் அகற்றப்பட்டது போக மீதமுள்ள 17159 கன.மீ அளவு குப்பைகளை Bio-Mining முறையில் அகற்றும் பணிக்கு 31.05.2022ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றது.

1. M/s. RK COMPANY
   சென்னை
2. M/s Our Land Engineering Works Pvt Ltd.,.
   சென்னை

மேற்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளின் (Technical Bid) தொழில்நுட்ப தகுதி கூர்ந்தாய்வு செய்யப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளும் தொழில்நுட்ப தகுதி (Technical Responsive) பெற்றுள்ளதால், 02.06.2022 அன்று விலைப்புள்ளி (Price Bid) உறை திறக்கப்பட்டது. வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளின் ஒப்புநோக்கு பட்டியல் கீழ்கண்டவாறு தயார் செய்யப்பட்டுள்ளது.

| வ. எண் | பணிகளின் விபரம் | மதிப்பீடு (ரூ இலட்சத்தில்) | ஒப்பந்தக்காரர்கள் பெயர் | ஒப்பந்தப்புள்ளி விலை விகிதம் மதிப்பீட்டை விட கூடுதல்/குறைவு |
|---|---|---|---|---|
| 1 | தென்காசி நகராட்சி தூய்மை இந்தியா திட்டம் (SBM) திடக்கழிவு மேலாண்மை பணிகள் (SWM) 2018-19ன் கீழ் மத்தளம்பாறை உரக்கிடங்கில் சேகரமாகி தேங்கியுள்ள17159க,மீ. திடக்கழிவு குப்பைகளை BIO-MINING முறையில் அப்புறப்படுத்தும் பணி | 111.00 | M/s. RK COMPANY சென்னை<br>M/s Our Land Engineering Works Pvt Ltd.,. சென்னை | 4.85% கூடுதல்<br>7.98% கூடுதல் |

மேற்படி விலைப்புள்ளியின் ஒப்பு நோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் சென்னை M/s. RK COMPANY நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி மதிப்பீடு விகிதத்தினை விட 4.85% கூடுதலாக உள்ளது. எனவே ஒப்பநதக்காரருக்கு விலைக்குறைத்து தருமாறு (Negotiation) இவ்வலுவலக கடிதம் எண்.877/2018/இ1. நாள்: 02.06.2022ம் தேதியில் கடிதம் அனுப்பப்பட்டது. இதனை பெற்றுகொண்டு விலையினை குறைத்து செய்து தர 03.06.2022ம் தேதியில் ஒப்பந்தக்காரரிடமிருந்து சம்மத கடிதம் வரப்பட்டது. அதன் பேரில் திருத்திய ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்யப்பட்டதில் மதிப்பீட்டினை விட 4.75% சதவீதம் கூடுதல் குறைவு என்ற விகிதத்தில் உள்ளது. எனவே மேற்கண்ட ஒப்பந்தக்காரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அ.கு 1 மேற்படி பணிக்கு மதிப்பீட்டினை விட 4.75% கூடுதலில் குறைவாக ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள சென்னை M/s. RK COMPANY நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை மன்றம் முடிவு செய்யலாம்.

2 மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவர் அவர்களின் முன்அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் 29**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை எண் 71, நாள் 13.09.2021ம் தேதிய அரசாணையின்படி நமக்கு நாமே திட்டம் (NNT) 2021–22ம் ஆண்டு திட்டத்தின்

கீழ் பொதுமக்களின் பங்களிப்புடன் பணிகள் மேற்கொள்ளவதற்கு, ஸ்ரீ காசி விஸ்வநாதர் கோவிலின் மேற்கு மற்றும் தெற்கு பகுதிகளில் FRP Urinal அமைக்கும் பணிக்கு ரூ4.00 இலட்சத்திற்கு மதிப்பீடு தயார் செய்யப்பட்டது. அதில் பொதுமக்கள் பங்குதொகையாக திருமதி.ரஃபீக்காள் என்பவர் ரூ1.33 இலட்சம் ஆணையாளர், தென்காசி நகராட்சி வங்கி கணக்கில் (கணக்கு எண் 612901096397) 16.03.2022ம் தேதியன்று செலுத்தப்பட்டது. தற்போது சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்: 27519-37/2021/P2, நாள் 31.03.2022ன் படி மேற்கண்ட பணிக்கு பொதுமக்கள் பங்குதொகையில் ரூ72000/- மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. ஆகையால் திருமதி.ரஃபீக்காள் என்பவரால் செலுத்தப்பட்ட ரூ1.33 இலட்சத்தில், பங்குதொகை ரூ72000/- போக மீதி தொகை ரூ61000/-யை திரும்ப வழங்கும்படி விண்ணபித்துள்ளார். எனவே மேற்படி மீதித் தொகை திரும்ப வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு 1 மன்றம் அனுமதிக்கலாம்

2 திருமதி.ரஃபீக்காள் என்பவருக்கு ரூ61000/-யை வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

**மன்றப்பொருள் 30**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவிற்கு **2022–2023**ம் ஆண்டிற்கு தேவையான தளவாடசாமான்கள் விநியோகம் செய்ய **22.06.2022**ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | பொருட்களின் பெயர் | ஒப்பந்தக்காரா் பெயர் மற்றும் முகவரி | |
|---|---|---|---|
| | | எம்.எஸ். எண்டர் பிரைசஸ் 257, பெரிய தெரு, திருநெல்வேலி டவுன் | ருவி டிடேர்ஸ் ,7/135 நேரு நகர் பெத்தநாடார் பட்டி. |
| 1 | மண்வெட்டி | 792 | 810 |
| 2 | சம்மட்டி | 1780 | 1850 |
| 3 | கோடாரி | 1325 | 1398 |
| 4 | சவல் | 1080 | 1150 |
| 5 | வாறுகால் கரண்டி | 690 | 735 |
| 6 | முள்கரண்டி (பெரியது) | 785 | 825 |
| 7 | முள்கரண்டி (சிறியது) | 328 | 372 |
| 8 | ஈக்கி கைமாறு | 48 | 52 |
| 9 | பெரிய கைமாறு | 448 | 490 |
| 10 | கடப்பாறை | 1800 | 1850 |
| 11 | உரம் கலக்கும் சல்லடை | 765 | 790 |
| 12 | பிரஸ் (ரோடு சுத்தப்படுத்துதல்) | 460 | 495 |
| 13 | வாளி | 458 | 468 |

| | | | |
|---|---|---|---|
| 14 | ஒட்டடை கம்பு | 110 | 120 |
| 15 | அரிவாள் | 735 | 755 |

அ.கு. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் எம்.எஸ். எண்டர்பிரைசஸ். திருநெல்வேலி டவுன் என்ற நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண். 945/2022/எச்1

**மன்றப்பொருள்31**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள டி.எண். 76பி 6941 வாகனத்திற்கு வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ள 22.06.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| SL.NO | COMPANY NAME AND ADDRESS | SANITARY NAPKIN DESTROYER MACHINE (QUICK DESTROYER RTE 025E) | SANITARY NAPKIN DESTROYER MACHINE (QUICK DESTROYER RTE 500) | SANITARY NAPKIN VENDING MACHINE (QUICK VEND RTEV120) |
|---|---|---|---|---|
| 1 | EVEREST CORPORATION 312-312 PVS COMPLEX SAROJINI NAIDU ROAD SIDDHAPUDUR. COIMBATORE | 54693 | 132868 | 41854 |
| 2 | VEERAKUMAR MACHNE TOOLS , 481/2 ELLAITHOTTANM ROAD V.O.C. COLONY EAST PEELAMEDU. COIMBATORE. | 61100/- | 155500 | 49890 |

அ.கு. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் கண்டுள்ள EVEREST CORPORATION 312-312 PVS COMPLEX SAROJINI NAIDU ROAD SIDDHAPUDUR. COIMBATORE என்ற நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.945/2022/எச்1

**மன்றப்பொருள் 32**

இந்நகராட்சி பொதுசுகாதாரப் பிரிவில் உள்ள டி.எண். 76ப்பி 6941 வாகனத்திற்கு வருடாந்திர பராமரிப்பு மேற்கொள்ள 22.06.2022ல் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | ஒப்பந்தக்காரர் பெயர் மற்றும் முகவரி | ஒப்பந்தப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | ஸ்ரீ முருகா மோட்டார்ஸ் ஓர்க்ஸ்,3/514 தென்காசி – செங்கோட்டை மெயின் ரோடு, கொட்டாகுளம். | ரூ.43900/– |
| 2 | கணேஷ் மோட்டார் ஓர்க்ஸ், புதுக்குடியிருப்பு, நாகர்கோவில். | ரூ.47850/– |
| 3 | ஸ்ரீ விநாயகர் மோட்டார் ஓர்க், 31/ஜி பாபநாசம் மெயின் ரோடு அம்பாசமுத்திரம். | ரூ.48690/– |

அ.கு. மேற்படி ஒப்பந்தப்புள்ளிகளில் வரிசை எண். 1ல் கண்டுள்ள ஸ்ரீ முருகா மோட்டார்ஸ் ஓர்க்ஸ்,3/514 தென்காசி – செங்கோட்டை மெயின் ரோடு, கொட்டாகுளம். என்ற நிறுவனம் குறைவான ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.862/2022/எச்1

**மன்றப்பொருள் 33**

தென்காசி நகராட்சி அலுவலகத்திற்கு 01/2021 முதல் 05/2022 வரையுள்ள காலங்களில் தினசரி நாளிதழ்கள் விநியோகம் செய்த வகைக்கு ரூ.13828/– (ரூபாய் பதிமூன்றாயிரத்து எண்ணூாற்று இருபத்து எட்டு மட்டும்) செய்தித்தாள் முகவர் திரு.எம்.இசக்கிமுத்து என்பவர் வழங்கக் கோரியுள்ளார். எனவே நகராட்சி அலுவலகத்திற்கு செய்தித்தாள்கள் விநியோகம் செய்த வகைக்கு பட்டியலில் கண்ட தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ.கு : மேற்கண்ட தொகை ரூ.13828/–க்கு வருவாய் பொது நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்

**மன்றப்பொருள் 34**

இந்நகராட்சியில் பதிவறை எழுத்தராக பணிபுரியும் திருமதி.P.பிரகாஷ்வரி என்பவரை 22.06.2022 முதல் 24.06.2022 வரை மூன்று நாட்களுக்கு கோவை, தமிழ்நாடு நகரியியல் பயிற்சி நிறுவனத்தின் கடித ந.க.எண்.323/19/அ3, நாள்.14.06.2022ன் படி, பயிற்சி வழங்குவதற்கான

செலவுத்தொகை ரூ.3000/—ஐ வங்கி வரைவோலையாக செலுத்தவும், மேற்படி செலவினத்தினை பொது நிதியில்  மேற்கொள்ளவும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு :

1. மன்றம் அனுமதிக்கலாம்
2. மன்ற அனுமதியினை எதிர்நோக்கி நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று மேற்கண்ட தொகை வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2561/2013/சி1)**

நகர்மன்றத்தலைவர்
தென்காசி நகர்மன்றம்

தென்காசி நகராட்சி

30.6.2022 அன்று நடைபெற்ற சாதாரண கூட்டத்தின் தீர்மான நகல்

| வ.எண் | மன்றப்பொருள் எண் | தீர்மான எண் | தீர்மானம் |
|---|---|---|---|
| 1 | 1 | 75 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 2 | 2 | 76 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 3 | 3 | 77 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 4 | 4 | 78 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 5 | 5 | 79 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 6 | 6 | 80 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 7 | 7 | 81 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 8 | 8 | 82 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 9 | 9 | 83 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 10 | 10 | 84 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 11 | 11 | 85 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 12 | 12 | 86 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 13 | 13 | 87 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 14 | 14 | 88 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 15 | 15 | 89 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 16 | 16 | 90 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 17 | 17 | 91 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 18 | 18 | 92 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 19 | 19 | 93 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 20 | 20 | 94 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 21 | 21 | 95 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |

| | | | |
|---|---|---|---|
| 22 | 22 | 96 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 23 | 23 | 97 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 24 | 24 | 98 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 25 | 25 | 99 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 26 | 26 | 100 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 27 | 27 | 101 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 28 | 28 | 102 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 29 | 29 | 103 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 30 | 30 | 104 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 31 | 31 | 105 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 32 | 32 | 106 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 33 | 33 | 107 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |
| 34 | 34 | 108 | அ.கு.அனுமதிக்கப்பட்டது |

(ஒம்).R.சாதிர்
நகர்மன்றத்தலைவர்
தென்காசி நகர்மன்றம்

/ உண்மை நகல் உத்தரவின் படி/

மேலாளர்
தென்காசி நகராட்சி